இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 07-01-2025

# வறுமை ஒழிப்பில் முதலிடம்

**டெல்லியில் உள்ள தேசிய கிடங்கு மேம்பாட்டு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான சேமிப்புக் கிடங்குகளைப் பதிவு செய்ததற்காகத் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ஒன்றிய அரசு முதல் பரிசு வழங்கிப் பாராட்டியுள்ளது. கடந்த 40 மாதங்களில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் தான் இதற்குக் காரணம்.**

ஏழை எளிய பொதுமக்களின் வசதிக்காக அவர்களுடைய குடியிருப்புகளுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதில் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். 633 முழு நேர நியாய விலைக் கடைகளும், 1,033 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் என மொத்தம் 1,666 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. 2,778 நியாய விலைக் கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளை அதிகரிப்பதுதான் ஒரு ஆட்சியின் உண்மையான மக்கள் அக்கறையாகும்.

100 கோடி மதிப்பீட்டில் 230 நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.359 கோடியில் மேல் கூரையுடன் நெல் சேமிப்புத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. 2023 சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா.சபையினால் அறிவிக்கப்பட்டது. இதை சிறுதானிய உணவுத் திருவிழாவாக தமிழ்நாடு அரசு மாநிலம் முழுவதும் கொண்டாடியது. விவசாயிகள் விளைவிக்கும் நெல்லினை இடைத்தரகர்கள் தலையீடின்றியும் கால தாமத மின்றியும் உடனடியாக விற்பனை செய்யும் பொருட்டு ஆன்லைன் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விருப்பப்படி அரிசிக்குப் பதில் கோதுமை வழங்கப்படுகிறது.

**இந்திய அளவில் உணவுக் கழகம் 1965 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆனதும் இந்திய உணவுக் கழகத்தைப் போல, தமிழ் நாட்டிலும் ஒரு உணவுக் கழகத்தை உருவாக்கினார்கள். இதன் மூலமாக உணவுப் பொருள்கள் மக்களைச் சென்று அடைவதற்காக நுகர் பொருள் வாணிபக் கழகம், பொது விநியோக திட்டம் ஆகிய இரண்டையும் பலப்படுத்தினார். அனைவருக்கும் குடும்ப அட்டை தரப்படுகிறது. அதற்கு முன்பு நகர் பகுதிகளில் தான் ரேசன் கடைகள் இருந்தது. கிராமப் பகுதிகளுக்கும் ரேசன் கடைகளை உருவாக்கினார் கலைஞர். விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகளை வழங்கினார். இதனால் நெல் உற்பத்தியும் அதிகம் ஆனது. நெல்லை மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு தமிழகத்தை மாற்றினார் முதல்வர் கலைஞர் அவர்கள்.**

1 கிலோ மீட்டருக்குள் ரேசன் கடைகளை அமைத்தார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைக் கொடுத்தார். கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தார். உழவர் சந்தைகளை உருவாக்கினார். 2006 ஆம் ஆண்டு ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று அறிவித்தார் கலைஞர் அவர்கள். ஆட்சிக்கு வந்ததும் ஒரு ரூபாய் ஆக்கினார். ரேசன் அரிசி வாங்குபவர்கள் தொகை அதிகம் ஆனது அதனால் தான்.

1974 ஆம் ஆண்டே ஆதார விலைக்கும் கூடுதலான விலையை தமிழக விவசாயிகளுக்குக் கொடுத்தார் கலைஞர். இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை கொடுத்த மாநிலம் தமிழ்நாடு. குவிண்டால் ஒன்றுக்கு கொள்முதல் விலையையும் சேர்த்து 15 ரூபாயை ஊக்கத்தொகையாக முதல்வர் கலைஞர் வழங்கினார்கள். அதற்கு போனஸ் - ஊக்கத்தொகை - போக்குவரத்து தொகை என்று சொல்லி வழங்கினார்கள். இது எமர்ஜென்சி காலக்கட்டத்தில் ரத்து செய்யப்பட்டது. 1977 - தி.மு.க. தேர்தல் அறிக்கையில், தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் நெல் கொள்முதலுக்கு கழக அரசு விவசாயிகளுக்கு அளித்து வந்த போனஸ் திரும்பவும் தர ஏற்பாடுகளை மேற்கொள்ளும் என்று அறிவித்தது. 1990 ஆம் ஆண்டும் மீண்டும் ஆட்சிக்கு வந்த முதல்வர் கலைஞர் அவர்கள், விவசாயிகளுக்கான ஊக்கத்தொகையை மீண்டும் வழங்கினார்.

**குடிசை மாற்று வாரியம், ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியம், தரிசு நிலங்களை ஏழைகளுக்கு வழங்குதல், விவசாய தொழிலாளர்க்கு நியாயமான கூலி வழங்க கணபதியா பிள்ளை ஆணையம், நகர்ப்புற தொழிலாளர் ஊதியத்தை நிர்ணயம் செய்ய கார்த்திகேயன் ஆணையம், விவசாயத் தொழிலாளர்கள் குடியிருந்த மனைகள் அவர்களுக்கே சொந்தம் ஆக்கும் வகையில் குடியிருப்பு மனைச் சட்டம், இந்தியாவிலேயே முதன்முதலாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தது, மாணவர்க்கு இலவச பேருந்துபாஸ், அனைவருக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அமைப்பு சாராத் தொழிலாளர் வாரியங்கள், உழவர் சந்தைகள், சமத்துவபுரங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியவை முதலமைச்சர் கலைஞர் காலத்தில் நிறைவேற்றப்பட்டன.**

இந்த வழித்தடத்தில் இன்றைய முதலமைச்சர் அவர்கள் 1.17 கோடி மகளிருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாயை உரிமைத் தொகையாக வழங்கி வருகிறார்கள். கோடிக்கணக்கான மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதியை ஏற்படுத்தி தந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டத்தின் வாயிலாக 9 லட்சம் மாணவ மாணவியர் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். 18 லட்சம் பள்ளிச் சிறுவர்கள் தினந்தோறும் காலையில் சிற்றுண்டி சாப்பிடுகிறார்கள். கோடிக்கணக்கான தொகை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான பெண்கள், தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்கிறார்கள்.

**இவை அனைத்தும் தமிழ் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் வறுமைக் குறைவான மாநிலங்களாக கேரளா முதலிடத்தையும், தமிழகம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்தது. 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் வெளியிட்ட பட்டினிச் சாவு இல்லாத மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் இடம்பெற்று இருந்தது. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றியாகும்.**

# திருவேற்காட்டில் ரூ.3.57 கோடி மதிப்பில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டினார்!

திருவள்ளூர், ஜன. 7 –

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் 15–வது நிதிக்குழு மானிய நிதி மற்றும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.3.57 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இதில் 18வது வார்டு, நூம்பல் பகுதியில், ரூ.1 கோடியே 80 லட்சம் மதிப்பில் 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி மற்றும் குடிநீர் இணைப்பு குழாய் அமைக்கும் பணி,

6–வது வார்டு, அயணம்பக்கம் மற்றும் மேலயனம்பாக்கம் பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பட்டு நிதியின் மூலம் ரூ.60 லட்சம் மதிப்பில் புதிய சமுதாயக் கூடம் கட்டும் பணி மற்றும் ரூ.13.50 லட்சம் மதிப்பில் புதிய நியாய விலை கடை அமைக்கும் பணி,

9வது வார்டு ஆவடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பட்டு நிதியின் ரூ.10 லட்சம் மதிப்பில் பிடிசி நகர் பேருந்து நிறுத்தம் கட்டும் பணி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பிரதான சாலையில் ரூ.18 லட்சம் மதிப்பில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி,

1வது வார்டு, சக்ரேஸ்வரர் நகரில், 1 வது மற்றும் 2 வது தெருவில் ரூ.35.00 லட்சம் மதிப்பில் இரண்டு மழை நீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணி,

ராஜரத்தினம் நகர் நாலாவது குறுக்கு தெருவில் சலவை தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.40 லட்சம் மதிப்பில் புதிய பல் நோக்கு கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.3 கோடியே 57 லட்சம் மதிப்பில் திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர், ஆவடி சா.மு. நாசர் தலைமை தாங்கி புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்ச்சியில் நகர மன்றத் தலைவர் என்.இ.கே. மூர்த்தி, மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜே.பவுல், நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள் பானு அரசு, நடராஜ், செல்வதுரை, பெனியமின், ஏ.சி.தெய்வசிகாமணி, எஸ். சங்கர், ஐ.ஜேக்கப், குமாரசாமி சாது, விக்னேஸ்வரன், உமாபதி, ஜெகன், குமார், சாந்திராஜா, பரிசமுத்து, பொன்.மனோகரன், ஆசைதம்பி, டி.பிரியா குமார், பாபு, பேபிஸ்ரீ, என்.ராஜ் அப்பு (எ) ஜெபராஜன், ஆ.நாராயணன், மு.சுரேஷ், திவாகர், நரேஷ், சுதாகர், தா.குடியரசன், ராஜேஷ் பிரவீன், மாவட்ட சலவை தொழிலாளர் அணி செயலாளர் முனுசாமி உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.1.2025) முகாம் அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள், தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்தநாள்!

## கழகத்தினர் ஏராளமானோர் நேரில் சந்தித்து வாழ்த்து!

சென்னை, ஜன. 7-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (5.1.2025 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் பேறறிஞர் அண்ணா ஆகியோர் நினைவிடங்களுக்கு நேரில் சென்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து சி.ஐ.டி.காலனி இல்லத்தில் திரளான கழகத் தொண்டர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும், அமைச்சர் பெருமக்கள் ஐ.பெரியசாமி, கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, கீதாஜீவன், பி.கே. சேகர்பாபு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், டி.ஆர். பி.ராஜா, அனிதா இராதா கிருஷ்ணன், இராணிப் பேட்டை காந்தி, தி.மு.க. பொருளாளரும், மக்களவை தலைவருமான டி.ஆர்.பாலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மக்களவை உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, செல்வம், அருண் நேரு, திருமதி. ராணி ஸ்ரீ குமார், முரசொலி, மாநிலங்களை உறுப்பினரும், தொ.மு.ச. தலைவருமான சண்முகம், மாநிலங்களவை உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், அப்துல்லா, கனிமொழி சோமு, கிரி ராஜன்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் துறைமுகம் காஜா, துணை அமைப்பு செயலாளர் எஸ். ஆஸ்டின், கழக செய்தி தொடர்பு தலைவர் டி. கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் மனோ தங்கராஜ், மயிலை த.வேலு, மோகன், பரந்தாமன், எம். சி.சண்முகையா, ஜி.வி.மார்கண்டேயன், கோ.தளபதி, ராஜா, தாயகம் கவி, வெற்றியழகன், தமிழரசி, எழிலன், அமலு, திருப்பூர் செல்வராஜ், ஊர்வசி அமிர்தராஜ், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மகேஷ், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நே.சிற்றரசு, ஜெயபாலன், முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் இளைய அருணா மற்றும் பலர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் மாநிலம் முழுவதும் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ஆதரவற்றோர் மற்றும் முதியோர்களுக்கு புத்தாடைகள், அறுசுவை உணவு மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

